## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்

முன்னிலை : திரு.B.பீட்டர், M.A., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

வேடசந்தூர்.

திருவள்ளுவராண்டு 2057 பரபாவ வருடம் ஆடி மாதம் 18-ம் நாள்

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ம் நாள் திங்கட்கிழமை

அசல் வழக்கு எண்.284/2008

(CNR.No.TNDG160020152019)

1.திருமதி.குப்பம்மாள் (இறப்பு)

2.திருமதி.நாச்சம்மாள்

3.திரு.ஆண்டி பெருமாள் அம்பலம் (வழக்கிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்)

(Amended as per order in I.A.No.7/2025 Dated 25.09.2025)

...... வாதிகள்

//எதிர்//

1.திரு.மு.க.ராமன்

2.திரு.மூக்கன் அம்பலம் (இறப்பு)

3.பெரியக்காள்

4.பஞ்சவர்ணம்

5.ஆறுமுகம்

6.கிருஷ்ணமூர்த்தி

7.குப்பம்மாள்

8.பழனிச்சாமி

9.சின்னச்சாமி ....பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 17.10.2008-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 24.07.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, 2ம் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.J.இராஜரத்தினம்** அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.R.தெய்வீகராஜ்** அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்து விசாரணை நேரத்தில் ஆஜரின்மையால் 16.12.2021ம் தேதி அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 2 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.நாகராஜ்** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும் பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

இவ்வழக்கானது, வழக்குச் சொத்துக்கள் வாதிகளுக்கு தனித்துப்பாத்தியப்பட்டது என விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், பிரதிவாதியின் பெயரில் உள்ள 29.09.1980ம் தேதியிட்ட வடமதுரை சார்பதிவக ஆவண எண்.1735/1980 ஆவணம் சட்டப்படி

செல்லத்தக்கதல்ல மற்றும் 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ள 24.07.1982 ம் தேதியிட்ட வடமதுரை சார்பதிவக ஆவண எண்.1071/1982 கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும், உரிமையியல் நடைமுறைச்சட்டம் சி.பி.சி ஆர்டர் 7 ரூல் 1ன்படி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:-**

இவ்வழக்கின் 1ம் வாதி குப்பம்மாளின் தாயார் நாச்சம்மாளும், ஒரு ராமன் அம்பலம், பெருமாள்அம்பலம் ஆகியோர் ஆண்டிபெருமாளம்பலத்தின் மக்கள் ஆவார்கள். 1ம் வாதிக்கு ஷை ராமன் அம்பலமும், பெருமாள்அம்பலமும் தாய்மாமன்கள். 1ம் வாதி குப்பம்மாள் தன் மாமனான பெருமாளம்பலத்தினை திருமணம் செய்துகொண்டதால் 2 ம் வாதி நாச்சம்மாள் பிறந்துள்ளார். 1ம் வாதியின் சகோதரரான முருகனம்பலம் கடந்த 2004 ம் ஆண்டு வாக்கில் 1ம் பிரதிவாதியினை விட்டுவிட்டு இறந்துவிட்டார். 1ம் வாதியும் லேட்.முருகனம்பலமும் மூத்தமனைவி நாச்சம்மாளின் மக்கள். 2ம் பிரதிவாதி இளையமனைவி பெருமாயி அம்மாளின் மகன் ஆவார். தாவாச்சொத்துக்கள் 1ம் வாதி, ராமன்அம்பலம், பெருமாள்அம்பலம் ஆகியோருக்கு பூர்வீகப் பாத்தியப்பட்டிருந்தது. ஷையார்களின் உடமையிலும், அனுபவத்திலும் இருந்து வந்துள்ள சொத்துக்களாகும். 1ம் வாதியும், ராமன் அம்பலம் மற்றும் பெருமாளம்பலம் சேர்ந்து ஒரு ஆறுமுகம்பிள்ளை என்பவரிடம் புரோட்டு

கடன் ரூ.5,370/- பெற்றிருந்துள்ளனர். ஷை புரோநோட்டு கடனுக்காக ஷை ஆறுமுகம்பிள்ளைக்கு ஷை 1ம் வாதி 2ம் வாதிக்காகவும், 1ம் வாதியின் மகளான 2ம் வாதிக்கு கார்டியனாக இருந்தும் மற்றும் ராமன் அம்பலமும் கடந்த 10.09.1970 ம் தேதியிலும் மேலும் ரூ.600/-பெற்றுக்கொண்டு ரூ.6000/-த்துக்கு கடன் ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள். அதன்பின் கடந்த 25.07.1973 ம் தேதியில் 1ம் வாதியானவர் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் லேட்.முருகனம்பலம் அவர்கள் பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். ஷை செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1ம் வாதியும், ராமனம்பலம், ஆறுமுகம்பிள்ளைக்கு எழுதிக்கொடுத்த ஈடுகடன் தொகையில் இந்த 1ம் வாதியின் கடன் தொகை ரூ.3000/-த்தினை முருகனம்பலம் செலுத்திவிட வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஷை கண்டிசன் செட்டில்மெண்ட் ஆவணப்படி முருகனம்பலம் செயல்படுத்தாமல் தவறிவிட்டதாலும் ஷை சொத்துக்கள் 1ம் வாதியின் அனுபவத்திலேயே இருந்ததாலும் கடந்த 25.07.1973 ம் தேதி ஷை தானசெட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் ஆவணத்தினை ஷை 1ம் வாதி கடந்த 16.12.2005 ம் தேதியில் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது. ஷை தேதியான 16.12.2005 ம் தேதியிலேயே ஆறுமுகம்பிள்ளையிடம் வாங்கிய கடனை 2ம் வாதியும் மற்ற வாதிகளும் செலுத்தி வைத்து செல் ரசீது பெற்றுள்ளனர். 1ம் வாதி பெயரில் 01.04.2007 ம் ஆண்டு சொத்துவரி செலுத்தி வைக்கப்பட்டுள்ளது. பட்டாவும் 1ம் வாதி பெயரிலேயே இருந்து வருகிறது. தானசெட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்ட பிறகும்

தாவாச்சொத்துக்களை 1ம் வாதியின் அனுபவத்திலேயே இருந்து வந்தது. 1ம் பிரதிவாதியை விட்டுவிட்டு முருகனம்பலம் இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதி தாவா வழக்குச் சொத்துக்களின் உரிமையை இழந்துவிட்டார். அதன்பின் 2ம் வாதியும் மற்ற வாதிகளும், தாவா சொத்துக்களை அமைதியான முறையில் அனுபவிப்பதை 1,2ம் பிரதிவாதிகள் அவரது வகையறா ஆட்களும் தடுத்து இடைஞ்சல்களை கொடுத்து வந்துள்ளார்கள். 2ம் வாதியும் மற்ற வாதிகளும் தாவா பிரட்சனையை அமைதியான முறையில் சந்தித்து வந்துள்ளனர். பிரதிவாதிகள் தாவாச்சொத்துக்களை வாதிகள் அனுபவிப்பதை தொடர்ந்து வெவ்வேறு இடையூறுகளை கொடுத்து வருகின்றனர். இதனால் வாதிகளுக்கு பெருத்த கஷ்டங்களும், நஷ்டங்களும் ஏற்படுகின்றன. எனவே, வழக்குச் சொத்துக்கள் வாதிகளுக்கு தனித்துப்பாத்தியப்பட்டது என விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :-**

(2.1) வாதிகளால் தாக்கல் செய்திருக்கும் தாவா பிராதில் கூறியுள்ள ஒருசில சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் யாவும் உண்மையல்ல. வாதிகளின் பிராதில் கண்ட வழக்குமூலம் உண்மையல்ல. ஒரு ஆண்டிப்பெருமாள் அம்பலத்திற்கு குப்பம்மாள் என்பவர் மனைவி. அவர்களுக்கு ஒரு நாச்சம்மாள், பெருமாள், ராமன்அம்பலம், ஆண்டியம்மாள், பெருமாயி, சின்னம்மாள் ஆகியோர் மக்கள்.

ஆண்டிப்பெருமாள் அம்பலம் மகள் நாச்சம்மாள் மற்றும் இந்த 2ம் பிரதிவாதியின் தாயார் பெருமாயி அம்மாளும், ராமன் அம்பலத்தை திருமணம் செய்துகொண்டனர். அந்த திருமணத்தின் மூலம் நாச்சம்மாளுக்கு, குப்பம்மாள் மற்றும் முருகன் மக்கள். ஆண்டிபெருமாள் - குப்பாயிஅம்மாள் தம்பதியினரின் மகள்-நாச்சம்மாள் என்பவரின் மகளான 1ம் வாதி குப்பம்மாள், தனது தாய்மாமாவான பெருமாளை திருமணம் செய்துகொண்டார். அதன்படி 2ம் வாதியானவர், குப்பம்மாள் - பெருமாள் தம்பதியனரின் மகள் ஆவார். 1ம் பிரதிவாதி என்பவர் ராமனம்பலத்தின் மூத்ததாரத்தின் மகனான முருகனின் மகன் ஆவார். ஆண்டிப்பெருமாள் அம்பலத்தின் 3வது மகன் ராமன். அந்த ராமனுக்கு சின்னம்மாள், குப்பி, போதும்பொண்ணு வழக்கில் கண்ட 3வது வாதி ஆண்டிபெருமாள் அம்பலம் ஆகியோர்கள் மக்கள். அந்த ஆண்டிப்பெருமாள் மற்றொரு காலம்சென்ற மகள் ஆண்டியம்மாள். அந்த ஆண்டியம்மாளின் கணவரும், வாரிசுமின்றி இறந்துவிட்டார். ஆண்டிப்பெருமாள் அம்பலத்தின் மற்றொரு மகள் பெருமாயி. மேற்படி பெருமாயிக்கு 2ம் பிரதிவாதி மகன். மேலே கூறப்பட்ட உறவுமுறைகள் வழக்குரையில் வாதிகளால் சரியாக துலக்கப்படவில்லை.

(2.2) ஆண்டிப்பெருமாள் அம்பலத்தின் மனைவி குப்பாயம்மாள் கடந்த 14.11.1970ம் தேதியில் அவரது பேரனான 2ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் சர்வே எண்.431/1 (வழக்கு 10 லக்க சொத்து)

ஏக்கர் 4 செண்ட் 86 ல், கீழ்புறம் நடுப்பக்கம் செண்ட் 29 க்கு மால். பொது ராஜ வாய்க்காலுக்கும் (கிழக்கு), குப்பம்மாள் பாக நிலத்திற்கும் (மேற்கு), கிருஷ்ணஅம்பலம் பாக நிலத்திற்கும் (தெற்கு) ப.ராமன் அம்பலம் நிலத்திற்கும் (வடக்கு), இதற்குள் 20 செண்ட், கிணறு 1/4 பாகத்தையும், 2 கமலையும், மேற்படி கமலை மற்றும் சர்வே எண்.519 ல் உள்ள புளியமரங்கள் 4, சர்வே எண்.532 ல், 1 ஏக்கர் 60 செண்ட். அதிலுள்ள புளியமரம் 2, சர்வே எண்.624 நடுவில் உள்ள புளியமரம், சர்வே எண்.629 ஓடை புறம்போக்கு தென்புறம் உள்ள 2 சி புளியமரம் இரண்டு, சர்வே எண்.777/1 ஏ, 2 சி புளியமரம் 1, சர்வே எண்.465 ல் உள்ள 2 சி புளியமரம் 2 ஆகியவகளை பதிவு செய்யப்பட்டு, தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி 2 ம் பிரதிவாதி மேற்படி சொத்துக்களுக்கு பட்டா பெற்று தீர்வை செலுத்தி அனுபவித்து வருகிறார். மேலும் சர்வே எண்.455/1 ல் 91 செண்டில், 22 3/4 செண்ட், சர்வே எண்.455/2 ல் 84 செண்டில் மேல்புரம் செண்ட் 42 ல், 21 செண்டும் மற்றும் அதிலுள்ள கிணற்றில் 4 ல் 1 பங்கு பாத்தியம் ஆகியவைகளை 13.06.1980 ல் இவ்வழக்கின் 2 ம் வாதி நாச்சம்மாளிடம் இருந்து 2 ம் பிரதிவாதி கிரையம் வாங்கி அனுபவித்து வருகிறார். 25.07.1973 ல் 1 வது வாதியால் முருகன் அம்பலத்திற்கு எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி சொத்துக்களை அனுபவித்து வந்த முருகன் அம்பலத்திடம் 29.09.1980 ல் சர்வே எண்.455/1 ல் ஏ.0 செ.91 ல் மேல்புறம் செ.45 1/2 ல், பாதி 22 3/4 செண்டும், சர்வே எண்.455/2 ல் ஏ.0 செ.84 ல் மேல்புறம் 42 செண்டில் பாதி 21 செண்ட், அதிலுள்ள கிணற்றில் 1/4

பாத்தியத்தையும், 29.09.1980 ல் இந்த 2 ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார். மேற்படி முருகன்அம்பலம், 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆவார். ராமன் அம்பலம் மகன் ஆர்.முருகன் அம்பலத்திற்கு கடந்த 25.07.1973 ல் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தில் கடந்த 24.07.1982 ம் தேதி சர்வே எண்.458/2 ல் 80 செண்டில் மேல்புரம் செண்ட் 40-ல், பொதுப்பாதி செ.20 ம், சர்வே எண்.464/2 செ.61 ல் மேல்புறம் செ.30 1/2 ல் பொதுப்பாதி செண்ட் 15 1/4, கிணற்றில் 1/4 பங்கு, மேற்கு பக்கம் கமலையில் 1/4 பங்கு, சர்வே எண்.431/1 ல் 7 1/4 செண்டும், கிணற்றில் 1/4 பங்கு, கமலைகள் 2 ல் மேற்புறம் உள்ள தெற்கு பார்க்க உள்ள கமலை 1 ல் 1/8 பங்கு மற்றும் மாமூல் நடைபாத்தியம் ஆகியவைகளை 2 ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார். ஆண்டிபெருமாள் அம்பலம் மகன் இப்பிரதிவாதியின் தாய்மாமனில் ஒருவரான ராமன் அம்பலத்திடமிருந்து 02.11.1978 ல் சர்வே எண்.431/1 ல் வடபுரத்தில் கீழ்புரம் 14 1/2 செண்டும், அதிலுள்ள கிணற்றில் 8 ல் 1 பங்கு, அம்மையநாயக்கர் குளத்து தண்ணீர், பாசி, மதகு, வாய்க்கால், பொது பாத்தியம் ஆகியவைகளை 02.11.1978 ல் 2 ம் பிரதிவாதி கிரையம் வாங்கி அனுபவித்து வருகிறார்.

(2.3) 1 ம் வாதி குப்பம்மாள் முருகனம்பலத்திற்கு எழுதிக்கொடுத்த 25.07.1973 ம்தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டது. அதை ரத்துசெய்ய யாருக்கும் அதிகாரம் இல்லை. அந்த பத்திரத்தை

ரத்து செய்ய 1ம் பிரதிவாதிக்கு எவ்வகையான உரிமையும் இல்லை. வாதி பாரா 5 ல் கூறிய ஈடானது, காலாவதியால் பாதிக்கப்பட்டுவிட்டது. அந்த ஈட்டை 1ம் வாதி பணம் செலுத்தி ரத்து செய்தார் என்று கூறியிருப்பது விந்தையாக உள்ளது. 10.09.1970 ல் எழுதிக்கொடுத்த ஈடுப்பத்திரம் சுமார் 35 வருடங்கள் கழித்து 1ம் வாதி பணம் செலுத்தியிருப்பதாக கூறியிருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. 25.07.1973 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்துக்களை வாதிகள் எவரும் அனுபவிக்கவில்லை. வழக்கு சர்வே நம்பரில் இப்பிரதிவாதியின் தாய்க்கும், சட்டப்படி 1/5 பாகம் பாத்தியம் உள்ளது. மேற்படி பாகம் தவிர இப்பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்துக்களிலும் இப்பிரதிவாதிக்கு பாத்தியம் ஆகும். இப்பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்துக்களையும், அவரின் தாயார் சொத்துக்களையும் இப்பிரதிவாதியே அனுபவித்து வருகிறார். மேற்படி விபரங்கள் வாதிகளால் பிராதில் மறைக்கப்பட்டுள்ளன. ஆகையால் வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. பிரதிவாதியின் மகள் குப்பம்மாள் ஏற்கனவே வேடசந்தூர் டி.மு.கோர்ட்டில் வழக்கு எண்.261/2008 ல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, இவ்வழக்கு 1,2 வாதிகள் மற்றும் அவர்களது வகையறாக்கள் மீதும் மற்றவர்கள் மீதும் வழக்கு தொடர்ந்து அந்த வழக்கில் சர்வே எண்கள்.421/9 ல் 21 செண்ட், 426/1C ல் 7 செண்ட், 578/1 ல் 67 செண்ட், 578/3 ஏ-ல் 26 செண்ட் மற்றும் நத்தம் எண் சர்வே 481 ல் உள்ள வீடு, மனையடி சம்பந்தமாக உறுத்துகட்டளை பரிகாரம் பெற்றுள்ளார். அதற்கு எதிர்வாதமாக இவ்வழக்கு

தொடரப்பட்டுள்ளது. எனவே, 2 ம் பிரதிவாதியின் ரிட்டன் ஸ்டேட்மெண்டை ஏற்று தாவா பிராதை இப்பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**3. வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன:**

1.) வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

2.) வாதிகளின் கொடிவழிபட்டியல் விபரம் சரியா?

3.) பிராது சொத்துக்களில் வாதிகளுக்கு தனித்த உரிமையும், அனுபவமும் உள்ளதா?

4.) வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் யாது?

4. வாதிகள் தரப்பில் 2 ம் வாதி நாச்சம்மாள் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களும், வாதிகள் தரப்பு சாட்சிகளாக சின்னப்பன் ஆசாரி வா.சா.2 ஆகவும் மற்றும் பிச்சன் வா.சா.ஆ.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் 2 ம் பிரதிவாதி மூக்கனம்பலம் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்களும், பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக பெருமாள் பி.வா.சா.ஆ.2 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.16 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டும் மற்றும் 3 ம்

பிரதிவாதி பெரியக்காள் பி.வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.17 முதல் பி.வா.சா.ஆ.21 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. தீர்வு : எழுவினா 2 :**

வழக்கானது தாவா சொத்துகள் வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரம் வழங்கவும், அதன் தொடர்பரிகாரமாக தாவா சொத்துகளை வாதிகள் அமைதியாக அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அவரது வகையறா ஆட்களோ யாதொரு தடையும், இடைஞ்சலும் செய்யாதவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. 2 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதிகளின் கொடிவழி ஜாபிதா உண்மையல்ல என்றும், உண்மை மறைக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஒரு ஆண்டிப்பெருமாள் அம்பலத்திற்கு குப்பம்மாள் என்பவர் மனைவி என்றும், அவர்களுக்கு ஒரு நாச்சம்மாள், பெருமாள், இராமன்அம்பலம், ஆண்டியம்மாள், பெருமாயி, சின்னம்மாள் ஆகியோர் மக்கள் என்றும், ஆண்டிப்பெருமாள் அம்பலம் மகள் நாச்சம்மாள் மற்றும் இந்த 2 ம் பிரதிவாதியின் தாயார் பெருமாயிஅம்மாளும், இராமன்அம்பலத்தை திருமணம் செய்துகொண்டனர் என்றும், அந்த திருமணத்தின் மூலம் நாச்சம்மாளுக்கு

குப்பம்மாள் மற்றும் முருகன் மக்கள் என்றும், ஆண்டிப்பெருமாள் - குப்பாயிஅம்மாள் தம்பதியினரின் மகள் நாச்சம்மாள் என்பவரின் மகளான 1ம் வாதி குப்பம்மாள் தனது தாய்மாமாவான பெருமாளை திருமணம் செய்துகொண்டார் என்றும், அதன்படி 2ம் வாதி குப்பம்மாள் மற்றும் பெருமாள் அம்பலத்திற்கு பிறந்த மகள் ஆவார் என்றும், 1ம் பிரதிவாதி இராமன்அம்பலத்தின் மூத்ததாரத்தின் மகன் ஆவார் என்றும், அந்த இராமன்அம்பலத்திற்கு சின்னம்மாள், குப்பி, போதுபொன்னு, 3ம் வாதி ஆண்டிப்பெருமாள் ஆகியோர் மக்கள் என்றும், அந்த ஆண்டிப்பெருமாள் மற்றொரு காலம் சென்ற மகள் ஆண்டியம்மாள், இந்த ஆண்டியம்மாளுக்கு கணவரும் வாரிசுகளின்றி இறந்துவிட்டார் என்றும், ஆண்டிப்பெருமாள் அம்பலத்தின் மற்றொரு மகள் பெருமாயி என்றும், மேற்படி பெருமாயிக்கு 2ம் பிரதிவாதி மகன் என்றும், மேலே கூறப்பட்ட உறவுமுறை வழக்குரையில் வாதிகளால் சரியாக துலக்கப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

7. வழக்குரையில் "இந்த வழக்கின் 1ம் வாதி குப்பம்மாளின் தாயார் நாச்சம்மாளும், ஒரு ராமன்அம்பலம், பெருமாள்அம்பலம் ஆகியோர்கள் ஆண்டிபெருமாளம்பலத்தின் மக்கள் ஆவார்கள். 1ம் வாதிக்கு ஷை ராமன் அம்பலமும், பெருமாள்பலமும் தாய் மாமன்கள். 1ம் வாதி குப்பம்மாள் தன் மாமனான பெருமாளம்பலத்தினை திருமணம் செய்துகொண்டதால் 2ம் வாதியாகிய நான் பிறந்தேன். இந்த வழக்கில் 2ம் வாதி 1ம் வாதியின் வாரிசு என்பதால்

சேர்க்கப்பட்டுள்ளேன். 1ம் வாதியின் உடன்பிறந்த சகோதரர் முருகனம்பலம் ஆவார். ஷை முருகனம்பலம் கடந்த 2004 ம் ஆண்டு வாக்கில் 1ம் பிரதிவாதியினை விட்டுவிட்டு இறந்துவிட்டார். 1ம் வாதியும் லேட்.முருகனம்பலமும் மூத்தமனைவி நாச்சம்மாளின் மக்கள். 2ம் பிரதிவாதி இளையமனைவி பெருமாயி அம்மாளின் மகன் ஆவார்" என்று வாதிகள் கூறியுள்ளனர்.

8. வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்குமிடையே உள்ள உறவு முறையை நிரூபிப்பதற்கு வா.சா.ஆ.1 கொடிவழி ஜாபிதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 தனது குறுக்குவிசாரணையில் " ஆண்டிப்பெருமாள் அம்பலத்தின் மனைவி குப்பம்மாள் என்ற குப்பாயி என்றால் சரிதான். குப்பம்மாள் என்ற குப்பாயிக்கு நாச்சம்மாள், பெருமாள், ராமன்அம்பலம், ஆண்டியம்மாள், பெருமாயி, சின்னம்மாள் ஆகியோர்கள் மக்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாச்சம்மாளின் உடன்பிறந்த ஆண்டியம்மாளுக்கு சின்னம்மாள், குப்பி என்ற குப்பம்மாள், போதும்பொன்னு, 3ம் வாதி ஆண்டிப்பெருமாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். நாச்சம்மாள் கணவர் யெர் ராமன்அம்பலம் என்றால் சரிதான். ராமன்அம்பலத்தின் மக்கள் குப்பம்மாள், முருகன்அம்பலம் என்றால் சரிதான். குப்பம்மாள் எனது தாயார் ஆவார், எனது தகப்பனார் பெயர் பெருமாள்அம்பலம். எனது பெற்றோருக்கு நான் ஒரே மகள். எனது தாயாருடன் பிறந்த முருகன் அம்பலத்தின் மகன் தான் 1ம் பிரதிவாதி ஆவார். எனது தாயார் அவரது தாய்

மாமாவான பெருமாள்அம்பலத்தை தான் திருமணம் செய்துகொண்டார். எனது தாத்தா ராமன்அம்பலம் என்பவரின் மற்றொரு மனைவி மூலம் பிறந்தவர் தான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது அம்மாயி நாச்சம்மாளின் உடன்பிறந்த சகோதரியான பெருமாயி மகன் தான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வா.சா.1 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் 3ம் வாதி தனது உடன்பிறந்த சகோதரர் இல்லை என்றும், அவருடன் பிறந்தவர்கள் சின்னம்மாள், குப்பி என்ற குப்பம்மாள், போதும்பொன்னு என்றும் சாட்சியம் அளித்துவிட்டு 2ம் பிரதிவாதி தனக்கு தாய்மாமா முறை என்றால் அதுபற்றி தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9. மேற்கண்ட சாட்சியத்திலிருந்து ஆண்டிப்பெருமாள் மற்றும் குப்பம்மாள் என்ற குப்பாயி என்பவருக்கு நாச்சம்மாள், பெருமாள், இராமன்அம்பலம், ஆண்டியம்மாள், பெருமாயி, சின்னம்மாள் ஆகியோர் மக்கள் என்றால் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள வா.சா.1 நாச்சம்மாளின் உடன்பிறந்த ஆண்டியம்மாளுக்கு சின்னம்மாள், குப்பி என்ற குப்பம்மாள், போதும்பொன்னு, 3ம் வாதி ஆண்டிப்பெருமாள் வாரிசுகள் என்று சாட்சியம் அளித்திருப்பது முரண்பாடாக உள்ளது. காரணம் வா.சா.ஆ.1 கொடிவழி ஜாபிதாவில் நாச்சம்மாளின் உடன்பிறந்த சகோதரியான ஆண்டியம்மாள் மற்றும் அவரது வாரிசுகள் பற்றி எதுவும் துலக்கப்படவில்லை. மேலும், 2ம் பிரதிவாதி தனக்கு தாய்மாமா முறை என்றால்

அதுபற்றி தெரியாது என்று வா.சா.1 சாட்சியம் அளித்தாலும், வா.சா.1 ன் தாத்தா இராமன்அம்பலம் என்பவரின் மற்றொரு மனைவி மூலம் பிறந்தவர் தான் 2ம் பிரதிவாதி என்றும், அம்மாயி, நாச்சம்மாளின் உடன்பிறந்த சகோதரியான பெருமாயி மகன் தான் 2ம் பிரதிவாதி என்றும் சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.3 தனது சாட்சியத்தில் தனது மனைவியான 2ம் வாதி நாச்சம்மாளுக்கு 2ம் பிரதிவாதி தாய்மாமன் உறவு முறை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் வா.சா.ஆ.1 கொடிவழி ஜாபிதாவில் 2ம் பிரதிவாதி பற்றி எந்த விபரமும் இல்லை. மேலும், வா.சா.ஆ.1 கொடிவழி ஜாபிதாவில் ஆண்டிப்பெருமாள் அம்பலம் மற்றும் குப்பம்மாள் ஆகியோரின் வாரிசுகளாக காட்டப்படும் சித்தரம்மா யார் என்பது பற்றி வாதிகள் தரப்பில் தெளிவாக துலக்கப்படவில்லை. வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ஆண்டிப்பெருமாள் அம்பலத்தின் மனைவி குப்பம்மாள் என்ற குப்பாயி ஆகியோருக்கு நாச்சம்மாள், பெருமாள்அம்பலம், இராமன்அம்பலம், ஆண்டியம்மாள், பெருமாயி, சின்னம்மாள் ஆகியோர் மக்கள் என்றாலும் அதுபற்றி தனக்கு தெரியாது என்று வா.சா.1 சாட்சியம் அளித்ததிலிருந்து வாதிகளின் கொடிவழி ஜாபிதா சரியானது என்று கூறியுள்ளார். ஆனால் மேலேகண்டவாறு வா.சா.1 குறுக்குவிசாரணையில் மேற்படி நாச்சம்மாள், பெருமாள், இராமன்அம்பலம், பெருமாயி, சின்னம்மாள் ஆகியோருடன் ஆண்டியம்மாள் பிறந்துள்ளார் என்பதை வா.சா.1 குறுக்குவிசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதால் மேற்கண்ட வாதுரை ஏற்கத்தக்கதல்ல என்று புறம்

தள்ளப்படுகிறது. மேலும், வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள எழுத்துப்பூர்வவாதுரையில் 2ம் பிரதிவாதி வேறொரு இராமன்அம்பலத்தின் மகன் என்று கூறியுள்ளார். ஆனால் வா.சா.3 தனது குறுக்குவிசாரணையில் 2ம் பிரதிவாதி வா.சா.1ன் தாத்தா இராமன்அம்பலத்தின் வேறொரு மனைவி மூலம் பிறந்தவர் என்றும், குறிப்பாக 2ம் பிரதிவாதி வா.சா.1ன் அம்மாயி, நாச்சம்மாளின் உடன்பிறந்த சகோதரியான பெருமாயி என்பவரின் மகன் தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்பதால் மேற்கண்ட வாதுரை புறம்தள்ளப்படுகிறது. எனவே, மேற்கண்ட சாட்சியத்திலிருந்து வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கிடையே உறவு முறை பட்டியல் வா.சா.ஆ.1 சரியானது என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று வாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றம் எழுவினா 2 க்கு விடைகாண்கிறது.

**<u>10. எழுவினாக்கள் 1 மற்றும் 3 :</u>**

வாதிகள் வழக்குரையிலும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபணவாக்குமூலத்திலும் தாவா சொத்துக்களும், வேறு சில சொத்துகளும் ஆதியில் ஒரு ஆண்டிப்பெருமாள் அம்பலத்திற்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றும், ஆண்டிப்பெருமாள் அம்பலத்தின் மக்களான பெருமாள்அம்பலம், இராமன்அம்பலம் ஆகியோர் மேற்படி ஆண்டிப்பெருமாள் அம்பலத்தின் இறப்பிற்கு பின்பு மேற்படி சொத்துகளை அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றும், 1ம் வாதி

குப்பம்மாள், தனது மைனர் மகளான 2ம் வாதி நாச்சம்மாளுக்கு கார்டியனாக இருந்தும் தனது கொழுந்தன் இராமன்அம்பலம் ஆகியோர் தாவா சொத்துக்கள் உட்பட வேறு சொத்துக்களை ஒரு ஆறுமுகம் பிள்ளையிடம் பெற்ற புரோநோட்டு கடனுக்காக கடந்த 10.09.1970 ல் ஒரு ஈடுஆவணம் வா.சா.ஆ.2 எழுதி வைத்தார்கள் என்றும், பின்னிட்டு குப்பம்மாள், தாவா சொத்துக்களை பொறுத்து தனது உடன்பிறந்த சகோதரரான 1ம் பிரதிவாதியின் தந்தை முருகன்அம்பலத்திற்கு கடந்த 25.07.1973 ம் தேதி ஒரு பதிவு நிபந்தனை தானசெட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.3 எழுதிவைத்தார் என்றும், அதன்படி தனது பாககடனான ஆறுமுகப்பிள்ளையிடம் வாங்கிய ரூ.3000/-ம் கடனை அடைத்துவிட்டு வா.சா.ஆ.3 க்கு கட்டுப்பட்ட தனது பாக சொத்துகளை சர்வசுதந்திரமாய் அடைந்துகொள்ளும்படி வா.சா.ஆ.3 ல் துலக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி 1ம் பிரதிவாதியின் தந்தை முருகன்அம்பலம் வா.சா.ஆ.3 ன்படி நிபந்தனையை நிறைவேற்ற தவறியதால் 16.12.2005 ல் வா.சா.ஆ.4 ன்படி வா.சா.ஆ.3 யை ரத்து செய்துவிட்டார் என்றும், ஆறுமுகப்பிள்ளையிடம் பெற்ற கடனை 16.12.2005 ல் தீர்த்து வா.சா.ஆ.5 செல் ரசீது பெற்றார் என்றும், பின்னிட்டு 1ம் வாதி 2ம் வாதியை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், தாவா சொத்துகள் 2ம் வாதியின் அனுபவத்தில் கிஸ்தி ரசீதுகள் வா.சா.ஆ.6, கணினி பட்டாக்கள் வா.சா.ஆ.7 ஆவணம் வாதிகள் பெயரில் உள்ளது என்றும், எனவே 1ம் பிரதிவாதியின் தந்தை முருகனம்பலம், 2ம் பிரதிவாதிக்கு 29.09.1980 ன்படி உள்ள கிரைய ஆவணம்

சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், 3 ம் வாதியின் சொத்துகளை தாவா வழக்கில் சேர்க்காததால் அவர் நீக்கறவு செய்யப்பட்டுள்ளார் என்றும், எனவே தாவா சொத்துகள் வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும், மேற்படி சொத்துகளை 2 ம் வாதி அனுபவித்து வருவதை இடைஞ்சல் செய்து வரும் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

11. 2 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தின்படி வழக்கு மூலம் உண்மையல்ல என்றும், கொடிவழி ஜாபிதா உண்மையல்ல என்றும், 1 ம் வாதியால் 1 ம் பிரதிவாதியின் தந்தை முருகன்அம்பலத்திற்கு எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.3 மற்றும் 2 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதியின் தந்தை முருகன்அம்பலத்திடம் கிரையம் பெற்ற 29.09.1980 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆகியவை நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், இந்நிலையில் வா.சா.ஆ.3 யை ரத்து செய்ய வா.சா.1 க்கு அதிகாரம் இல்லையெனவும், மேலும் வா.சா.ஆ.2 ன்படி 1 ம் வாதி பெற்ற ஈடுகடனை பொறுத்து வா.சா.ஆ.5 ன்படி கடனை செலுத்தி செல்ரசீது பெற்றதாக கூறுவது உண்மையல்ல என்றும், வா.சா.ஆ.3 க்கு பின்பு அதற்கு கட்டுப்பட்ட சொத்துக்களை வாதிகள் அனுபவித்து வரவில்லை என்றும், தாவா வழக்கு சொத்தில் 2 ம் பிரதிவாதியின் தாய்க்கு சட்டப்படி 1/5 பாகம் உள்ளது என்றும், 2 ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்துக்களை 2 ம் பிரதிவாதியே அனுபவித்து

வருகிறார் என்றும், மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் கூறியுள்ளார்.

12. இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி வாதிகள் தரப்பில் விசாரணையின்போது ஆஜரின்மையால் அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

13. வழக்குரையில் கண்டுள்ள சொத்துக்களின் விபரத்தை பரிசீலிக்கும்போது 1ம் வாதி 1ம் பிரதிவாதியின் தந்தையான முருகன்அம்பலத்திற்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் வா.சா.ஆ.3 க்கு கட்டுப்பட்ட சொத்துகள் என்பது தெரியவருகிறது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துப்பூர்வவாதுரையில் பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.6, பி.வா.சா.ஆ.3 ஆகியவற்றிற்கு கட்டுப்பட்ட சொத்துகள் வழக்கு சொத்துகள் இல்லையென்றும், வழக்கை திசைதிருப்புவதற்கும், நீதிமன்றத்தை தவறாக வழிநடத்துவதற்கும், வழக்கில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்குமே மேற்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.3 க்கு கட்டுப்பட்ட சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் பி.வா.சா.ஆ.5 ன்படி கிரையம்பெற்ற கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் கூறியுள்ளனர்.

14. 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துப்பூர்வவாதுரையில் வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.5 ஏற்படுத்தப்பட்ட நாளில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், வா.சா.ஆ.3 யை ரத்து செய்வதற்கு 1ம் வாதிக்கு எந்த அதிகாரமும் இல்லையென்றும், வா.சா.ஆ.3 ல் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனையை நிறைவேற்றாவிடில் 1ம் வாதிக்கு வா.சா.ஆ.3 யை ரத்து செய்வதற்கு அதிகாரம் உள்ளது என்ற வாசகம் இல்லையென்றும், மேலும் பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.6, பி.வா.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களுக்கு கட்டுப்பட்ட சொத்துகளை பொறுத்து வாதிகளும், 1ம் பிரதிவாதியும் பல விற்கிரையங்களை ஏற்படுத்தி வில்லங்கங்களை உருவாக்கியுள்ளனர் என்றும், மேலும் நாச்சம்மாளின் சகோதரியான பெருமாயின் மகன் தான் 2ம் பிரதிவாதி என்பதால் தாவா சொத்தில் தனது தாய்க்கு 1/5 பாகம் உள்ளது என்றும், மேலும் மேற்படி ஆவணங்களுக்கு கட்டுப்பட்ட நபர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்பதால் தாவா வழக்கானது அவசிதரப்பினர்களை சேர்க்க தவறிய தோசத்திற்கு ஆட்பட்டுள்ளது என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று கூறியுள்ளார்.

15. வா.சா.1 தனது குறுக்குவிசாரணையில், நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும், வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் பற்றி தனக்கு தெரியாது என்றும், தங்கள் பெயரில் பட்டா உள்ளது என்றும், 2ம் பிரதிவாதி வாதியின் பாட்டியான குப்பம்மாள் என்ற குப்பாயி

அம்மாளிடமிருந்து பி.வா.சா.ஆ.1ன்படி சில சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதி பெற்றுள்ளார் என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும், பி.வா.சா.ஆ.3ன்படி சர்வே எண்.431/1ல் 14 1/2 செண்ட் நிலத்தை 2ம் பிரதிவாதி இராமன்அம்பலம் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும், வா.சா.ஆ.2ல் ஈடுபத்திரத்தில் ஒருவருட கெடு போட்டு எழுதப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.2ன்படி முருகனம்பலம், மூக்கனம்பலம், பெருமாயிஅம்மாள் ஆகியோர் சேர்ந்து ஈடு லாபகடன் பத்திரம் எழுதிகொடுத்துள்ளது தனக்கு தெரியாது என்றும், மேற்படி ஈடுலாபகடனை குப்பாயம்மாள் கட்டி முடித்து அதன்பின்பு 2ம் பிரதிவாதி, 1ம் வாதி, வா.சா.1ன் தாய்மாமன் முருகன்அம்பலம் ஆகியோருக்கு பல்வேறு செண்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. வா.சா.ஆ.2யை கவனமுடன் பரிசீலிக்கும்போது வா.சா.ஆ.2ற்கு கட்டுப்பட்ட சொத்துகளை பெருமாள்பிள்ளை மகன் ஆறுமுகப்பிள்ளை என்பவரிடம் இராமன்அம்பலம் மக்கள் முருகனம்பலம், மூக்கனம்பலம், இராமன்அம்பலத்தின் மனைவி பெருமாயிஅம்மாள் ஆகியோர் சேர்ந்து ஈடுலாபகடனை ஏற்படுத்தி ஒருவருட வாய்தாவிற்குள் தொகையை செலுத்தி சொத்துக்களை மீட்டுகொள்வதாக எழுதப்பட்டுள்ளது தெரியவருகிறது. இருப்பினும்

ஈடுகடனுக்காக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தை மீட்பதற்கு ஒருவருட வாய்தா என கெடுவிதித்து வா.சா.ஆ.2 ஏற்படுத்தப்பட்டுள்ளபோதிலும், வா.சா.ஆ.2 க்கு கட்டுப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு 12 ஆண்டுகள் உள்ளன. ஆனால் 1970 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஈடுகடனுக்கு கட்டுப்பட்ட சொத்துகளை வா.சா.ஆ.5 ன்படி 2005 ம் ஆண்டு கடனை செலுத்தி சொத்துகளை மீட்டுள்ளதாக வாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது. மேலே கண்டபடி வா.சா.ஆ.2 க்கு கட்டுப்பட்ட சொத்துகளை மீட்பதற்கு உரிய காலம் காலாவதியாகிவிட்ட நிலையில் ஏறக்குறைய 34 ஆண்டுகளுக்கு பின்பு கடனை செலுத்தி சொத்துக்களை மீட்டதாக கூறுவது விந்தையானது என பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 யை நிரூபிப்பதற்கு ஆறுமுகப்பிள்ளையோ அவரது வாரிசுகளோ சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், சட்டப்படி வா.சா.ஆ.2 க்கு கட்டுப்பட்ட சொத்துகளை 12 ஆண்டுகளுக்குள் மீட்க தவறியது பற்றி ஆறுமுகம்பிள்ளை நடவடிக்கை எடுத்தாரா என்பது பற்றி இருதரப்பிலும், எந்த விம்மலும் இல்லை. ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.5 நடைமுறைக்கு வந்துவிட்டது என்று கூறியுள்ளனர்.

17. வா.சா.ஆ.5 ன்படி வா.சா.ஆ.2 க்கு கட்டுப்பட்ட ஈடுகடனை வாதி செலுத்தி சொத்தை மீட்டுகொண்டது உண்மையனெ ஒரு வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும், அதற்கு முன்பு வா.சா.ஆ.3 ன்படி 1ம் பிரதிவாதியின்

தந்தைக்கு 1ம் வாதி எழுதிகொடுத்த தாவா சொத்துக்கள் அடங்கிய தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்வதற்கு 1ம் வாதிக்கு அதிகாரம் உள்ளதா என்ற கேள்வி எழுகின்றது. சொத்து உரிமை மாற்றுசட்டம் பிரிவு 126 ன்படி விலக்களிக்கும் பகுதியில் (Proviso) கொடைதருபவரின் விருப்பம் காரணமாக மட்டுமே முழுவதுமாக அல்லது பகுதியாக ரத்து செய்யப்படக்கூடியதாக இருக்கவேண்டும் என்று தரப்பினர்கள் உடன்படுகிற ஒருகொடை முழுவதுமாகவோ அல்லது நேர்விற்கு ஏற்ப பகுதியாகவோ விழலாகும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.3 யை பரிசீலிக்கையில் 1ம் வாதி வா.சா.ஆ.2 ன்படி கட்டுப்பட்டுள்ள பகுதிக்கடன் ரூ.3000/-ஐ 1ம் பிரதிவாதியின் தந்தை செலுத்த தவறினால் வா.சா.ஆ.3 யை ரத்து செய்வதற்கு தனக்கு அதிகாரம் உள்ளது என்பது குறித்து வாசகங்கள் வா.சா.ஆ.3 ல்இல்லை. மேலே கண்டபடி வா.சா.ஆ.3 யை தன்னிச்சையாக 1ம் வாதி ரத்து செய்வதற்கு சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு 126 ன்படி 2ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்வைத்துள்ள வாதுரையின்படியும், அதிகாரம் இல்லையென்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, வா.சா.ஆ.4 ன்படி வா.சா.ஆ.3 யை 1ம் வாதி தன்னிச்சையாக ரத்து செய்துவிட்டதாக கூறுவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், 2ம் பிரதிவாதிக்கு இராமன் அம்பலம் வகையறா தாவா சொத்துகளை பொறுத்து எழுதிகொடுத்த 29.09.1980ம் தேதியிட்ட ஆவண எண்.1735/1980 கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம்

கோரியுள்ள நிலையில் வாதிகள் தரப்பில் மேற்படி ஆவணம் ஏன் தாக்கல்செய்யப்படவில்லை என்ற கேள்வி எழுகின்றது. அதேபோல் 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ள 24.07.1982 ம் தேதியிட்ட வடமதுரை சார்பதிவக ஆவண எண்.1071/1982 கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரம் கோரியிருந்தாலும் அந்த ஆவணம் வாதி தரப்பில் ஏன் தாக்கல் செய்யப்படவில்லை என்ற கேள்வி எழுகின்றது. ஆனால் அதே வேளையில் பிரதிவாதிகள் தரப்பில் 29.09.1980 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.5 மற்றும் 24.07.1982 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதிக்கு முருகன் அம்பலம் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆவணங்கள் ஏன் தாக்கல் செய்யப்படவில்லை என்ற கேள்வி எழுகின்றது. அது வாதிகள் தரப்பு வழக்கை பாதிக்கக்கூடிய அம்சம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

18. கற்றறிந்த 2 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வாதுரையில் வழக்கு நிலுவையில் உள்ளபோது 2 ம் வாதி 12.02.2013 ம் தேதி தாவா 3 லக்க சொத்தை பொறுத்து செல்லம்மாள் என்பவருக்கு கிரையம்செய்து கொடுத்துள்ளதை வாதிகள் மறைத்துள்ளனர் என்றும், தாவா 7 லக்க சொத்தை பொறுத்து கடந்த 01.08.1981 ம் தேதி வாதிகள் கிரையம் செய்து கொடுத்துள்ளதை செல்லாது என்று அறிவிக்க கோரி எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றும், கடந்த 14.11.1970 ம் தேதி 2 ம்

பிரதிவாதிக்கு அவரது பாட்டி குப்பம்மாள் என்ற குப்பாயம்மாள் தாவா சொத்துக்களை பொறுத்து சிலவற்றை தானசெட்டில்மெண்ட் ஆவணமாக எழுதி பதிந்துகொடுத்துள்ளார் என்றும், தாவா சொத்துக்கள் சிலவற்றை 2ம் வாதி நாச்சம்மாள் 2ம் பிரதிவாதிக்கு கடந்த 13.06.1980ம் தேதி கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றும், எனவே அனைத்து பத்திரங்களும் பல்வேறு தரப்பினர்களுக்கு பல ஆவணங்கள் மூலம் உரிமை மாறிவிட்டநிலையில் கடந்த 25.07.1973ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஈடுகடன் காட்டப்படவில்லை என்று கூற முடியாது என்றும், ஈடுகடன் கொடுத்தவாறே எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 2ம் பிரதிவாதி ஈடுகடன் செலுத்தப்பட்டுவிட்டதாக குறுக்குவிசாரணையில் கூறியுள்ளார் என்றும் முன்வைத்துள்ளார். 12.02.2013ம் தேதி தாவா 3லக்க சொத்தை பொறுத்து 2ம் வாதி வகையறா செல்லம்மாள் என்பவருக்கு கிரையம்செய்து கொடுத்தது சம்மந்தமாக எதிர்வழக்குரையில் எதுவும் கூறப்படவில்லை என்பதால் 3ம் லக்க சொத்தை பொறுத்து 2ம் வாதி வகையறா கிரையம் செய்துள்ளார்கள் என்பது ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஒருவேளை உண்மையாக இருந்தாலும் அது சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு 52ன்படி இவ்வழக்கின் தீர்ப்பாணைக்கு கட்டுப்பட்டதாகும்.

19. அதேபோல 01.08.1981ம் தேதி தாவா 7லக்க சொத்தை பொறுத்து

ஆண்டியம்மாளுக்கு வாதிகள் கிரையம்செய்துகொடுத்தது சம்மந்தமாக எதிர்வழக்குரையில் எதுவும் கூறவில்லை என்பதால் அது சம்மந்தமாக 2ம் பிரதிவாதியின் தரப்பில் எழுப்பப்பட்ட வாதுரை ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. பி.வா.சா.ஆ.3 ன்படி 2ம் பிரதிவாதிக்கு இராமன்அம்பலம் தாவா சொத்துக்கள் சிலவற்றை கிரையம் எழுதிகொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.3 யை பரிசீலிக்கையில் இராமன் அம்பலம் தனக்காகவும், தனது மைனர் மக்கள் சின்னம்மாள், குப்பம்மாள் ஆகிய இருவருக்கும் கார்டியனாக இருந்து மூக்கனம்பலம் என்பவருக்கு சர்வே எண்.431ல் 14 1/2 செண்ட் மற்றும் அதில் உள்ள கிணற்றில் 8ல் ஒருபாகம் பாத்தியத்தை கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. இது சம்மந்தமாக வாதிகள் தரப்பில் எந்த விம்மலும் இல்லை. விளக்கமும் இல்லை. அது ஏன் என்பது வாதிகள் தரப்பிற்கு நன்கு தெரியும்.

20. தாவாசொத்தில் வாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்பதற்கு வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வா.சா.ஆ.6 என்பது கிஸ்தி ரசீதுகளாகும். வா.சா.ஆ.7 என்பது கணினி பட்டாக்களாகும். வா.சா.ஆ.7 யை பரிசீலிக்கையில் தாவா சொத்துக்களுக்கான பட்டா என்பது 1,2 வாதிகளின் பெயரில் மட்டும் தனித்து இல்லை. மாறாக அவை கூட்டுப்பட்டாவாக காட்டப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக வா.சா.1 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் தனது பெயரில்

தாவா சொத்துகளுக்கான பட்டா தனித்து உள்ளதாக தெளிவாக சாட்சியம் அளிக்கவில்லை. தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி தரப்பில் அனுபவத்தில் உள்ளார்கள் என்பதற்கு பி.வா.சா.ஆ.7, பி.வா.சா.ஆ.8, பி.வா.சா.ஆ.11 முதல் பி.வா.சா.ஆ.15 தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பி.வா.சா.ஆ.7 யை பரிசீலிக்கையில் 10 வது தாவா அயிட்ட சொத்திற்கான பட்டா இராமன்அம்பலம் மகன் மூக்கனம்பலம் பெயரில் உள்ளது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.8 மற்றும் பி.வா.சா.ஆ.9 ஆகியவை சர்வே எண்.431/1A8 மற்றும் 480 க்கான அ பதிவேடு 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.1 யை பரிசீலிக்கையில் 3 மற்றும் 4 லக்க சொத்தான சர்வே எண்.458/2A, 467/2A குப்பம்மாள் மற்றும் மூக்கனம்பலம் பெயரிலும், தாவா 1,2 லக்க சொத்துக்களுக்கான பட்டா 7 பேர் கொண்ட கூட்டுப்பட்டாவாகவும் உள்ளது தெரியவருகிறது. வா.சா.ஆ.12 யை பரிசீலிக்கையில் சர்வே எண்.532 க்கான பட்டா மூக்கனம்பலத்தின் பெயரில் இருந்தாலும் அது தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டதல்ல என்று தெரியவருகிறது. வா.சா.ஆ.13 யை பரிசீலிக்கையில் சர்வே எண்கள்.421/9, 578/1, 578/3A, 426/1C ஆகியவற்றிற்கான பட்டா எண்.53 பாக்கியராஜ் மனைவி குப்பம்மாள் பெயரில் இருப்பது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.14 யை பரிசீலிக்கையில் மூக்கனம்பலத்தின் பெயரில் உள்ள கிஸ்தி ரசீதுகளாகும். பி.வா.சா.ஆ.15 என்பது 1433 பசலி ஆண்டிற்கான அடங்கல் 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது தெரியவருகிறது. எனவே, தாவா சொத்துக்கள் மீது வாதி தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறார்

என்பதற்கு போதுமான ஆவண சாட்சியங்களை வாதி முன்வைக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. வா.சா.2 தனது சாட்சியத்தில் நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதால் அவருடைய சாட்சியம் நம்பத்தகுந்ததில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. வா.சா.3 தனது சாட்சியத்தில் 2ம் பிரதிவாதி மூக்கனம்பலத்தின் மகள் குப்பம்மாள் என்பவர் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.261/2008 என தன்னையும், 1ம் பிரதிவாதியாக காட்டி அவரது மனைவி நாச்சம்மாளை 2ம் பிரதிவாதியாக காட்டியும் மற்றும் 7 நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து 19.03.2009ம் தேதி தீர்ப்பு பெற்றுள்ள விபரத்தை பொறுத்தவரை Exparty ஆக இருந்தோம் என்றும், மேற்படி வழக்கு இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். சுருக்கமாக கூறின், 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு 1ம் வாதி தாவா சொத்துக்களை பொறுத்து வா.சா.ஆ.3 ன்படி பதிவு தானசெட்டில்மெண்ட் மூலலம் பாத்தியப்படுத்திவிட்ட பின்பு, வாதிகளின் வழக்கின்படி, வா.சா.ஆ.3ல் 1ம் பிரதிவாதியின் தந்தையும் 1ம் வாதியின் உடன்பிறந்த சகோதரரான முருகனம்பலம் மீது விதிக்கப்பட்ட நிபந்தனையை அவர் நிறைவேற்ற தவறினால் வா.சா.ஆ-3 ரத்து செய்வதற்கு தனக்கு அதிகாரம்/உரிமை உள்ளது என வாசகம் இல்லாத நிலையில், வா.சா.ஆ.2 ஏற்படுத்தப்பட்டு ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு பின் ஈடுகடனை செலுத்தி வா.சா.ஆ.4 ன்படி வா.சா.ஆ.3 யை ரத்து செய்துள்ளதாக

முன்வைக்கப்பட்டுள்ள வழக்கு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல, 2ம் பிரதிவாதி முன்வைத்துள்ள வழக்கின்படி வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.5 ஏற்படுத்தப்பட்ட பின்பு அவை சட்டப்டி நடைமுறைக்கு வந்துவிட்டது. தாவா சொத்துகள் 1,2 வாதிகள் முன்வைத்து வா.சா.ஆ.1 கொடிவழி பட்டியலை உரிய ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்களின் மூலம் நிரூபிக்க தவறிவிட்டனர். தாவா சொத்துகள் 1,2 வாதிகளுக்கு தனித்துப்பாத்தியப்பட்டது என்பதை உரிய ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதை உரிய ஆவண சாட்சியங்கள் மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் மூலம் வாதிகள் நிரூபிக்க தவறிவிட்டனர் என்றும், மேலும் தாவா சொத்தில் 2ம் வாதி தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறார் என்பதற்கு இந்நீதிமன்றம் நம்பும்வகையில் உரிய தெளிவான சாட்சியத்தை முன்னிறுத்தி நிரூபிக்கவில்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிப்பதால் வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 1மற்றும் 3 க்கு இந்நீதிமன்றம் விடைகாண்கின்றது.

**21. எழுவினா 4:**

வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்று 1 முதல்

3 எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் விடை கண்டுள்ளதால் இதர பரிகாரங்களும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் எழுவினா 4 க்கு விடை காண்கிறது.

**இறுதியாக, இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

B.Peter Digitally signed by B.Peter

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வேடசந்தூர்.**

**1. வாதிகள் தரப்பு சாட்சிகள் :**

1. வா.சா.1 -நாச்சம்மாள்

2. வா.சா.2 - சின்னப்பன்ஆசாரி

3. வா.சா.3-பிச்சன்

## 2. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | ----- | கொடிவழி ஜாபிதா | அசல் |
| வா.சா.ஆ.2 | 10.09.1970 | 1 ம் வாதியும், ராமன் அம்பலமும் ஒரு ஆறுமுகம்பிள்ளைக்கு எழுதி வைத்துள்ள ஈடுகடன் ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 25.07.1973 | 1 ம் வாதி, முருகனம்பலம்பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 16.12.2005 | 25.07.1973 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ரத்து செய்த ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.5 | 16.12.2005 | ஆறுமுகப்பிள்ளையிடம் வாங்கிய கடனை அடைத்ததற்கான செல் ரசீது | அசல் |
| வா.சா.ஆ.6 | ----- | கிஸ்தி ரசீதுகள் (எண்ணிக்கை 4) | அசல் |
| வா.சா.ஆ.7 | ----- | கணினி பட்டாக்கள் (எண்ணிக்கை 6) | கணினி நகல் |
| வா.சா.ஆ.8 | 18.11.2009 | வாரிசு சான்று | நகல் |

**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:-**

1. பி.வா.சா.1 - மூக்கனம்பலம்

2.பி.வா.சா.2 - பெருமாள்

3.பி.வா.சா.3 - பெரியக்காள்

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-**

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 14.11.1970 | 2ம் பிரதிவாதிக்கு அவரது பாட்டி குப்பம்மாள் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 25.07.1973 | முருகனம்பலத்துக்கு, 1ம் வாதி குப்பம்மாள் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 02.11.1978 | 2ம் பிரதிவாதிக்கு, ராமனம்பலம் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 13.06.1980 | 2ம் பிரதிவாதிக்கு, நாச்சம்மாள் வகையறா | சான்றிட்ட நகல் |

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| | | எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | |
| பி.வா.சா.ஆ.5 | 29.09.1980 | 2ம் பிரதிவாதிக்கு, முருகன் அம்பலம் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.6 | 24.07.1982 | 2ம் பிரதிவாதிக்கு, முருகனம்பலம் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.7 | ----- | 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா (பட்டா எண்.769) | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.8 | ----- | 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள "அ" பதிவேடு | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.9 | ----- | 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள "அ" பதிவேடு | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.10 | 01.01.1975 முதல் | வில்லங்க சான்று | கணினி நகல் |

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| | 07.03.2022 | | |
| பி.வா.சா.ஆ.11 | 25.09.2023 | 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள கூட்டுப்பட்டா (பட்டா எண்.177, 1490, 1218) | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.12 | 31.08.2021 | 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள கூட்டுப்பட்டா (பட்டா எண்.764) | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.13 | 21.09.2023 | 2ம் பிரதிவாதி மகள் குப்பம்மாள் பெயரில் உள்ள பட்டா (பட்டா எண்.53) | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.14 | 23.07.1990 முதல் 15.03.2021 வரை | 2ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்துக்களுக்கு உரிய கிஸ்தி ரசீதுகள் (எண்ணிக்கை 16) | அசல் |
| பி.வா.சா.ஆ.15 | 25.09.2023 | 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள அடங்கல் (1433ம் பசலி) | உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.16 | ----- | பி.வா.சா.2ன் ஆதார் அட்டை | நகல் (அசலுடன் |

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| | | | ஒப்பீடு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.17 | 01.08.1981 | தாவா 7 லக்க சொத்தை பொறுத்து ஆண்டியம்மாளுக்கு வாதிகள் எழுதி கொடுத்த கிரையப்பத்திரம் | கணினி சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.18 | 29.06.1981 | 2ம் பிரதிவாதிக்கு, ராமன் அம்பலம் வகையறா தாவா 1,2 லக்க சொத்தை பொறுத்து எழுதி கொடுத்த கிரையப்பத்திரம் | கணினி சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.19 | 02.11.1981 | தாவா 7 லக்க சொத்தை பொறுத்து சண்முகத்திற்கு, முருகனம்பலம் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | கணினி சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.20 | ---- | 3ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை | நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட் |

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
| --- | --- | --- | --- |
| | | | டது) |
| பி.வா.சா.ஆ.21 | 12.02.2013 | தாவா வழக்கு நிலுவையில் உள்ளபோது 2ம் வாதி வகையறா தாவா 3 லக்க சொத்தை பொறுத்து P.செல்லம்மா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | கணினி சான்றிட்ட நகல் |

B.Peter Digitally signed by B.Peter

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வேடசந்தூர்.**